15 DEC 1995

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, கண்டிய விவாகம், மணநீக்கம் (திருத்தம்)

---

*(1995, ஒக்ரோபர் மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1995, ஒக்ரோபர் மாதம் 21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 30*

*தபாற் செலவு : ரூபா 2.50*

## 1995 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, கண்டிய விவாகம், மணநீக்கம் (திருத்தம்)

[1995, ஒக்ரோபர் மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 3/95

### கண்டிய விவாகம், மணநீக்கக் கட்டளைச் சட்டத்தைத் திருத்து வதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, கண்டிய விவாகம், மணநீக்கம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடுசெய்யப்படும்) கண்டிய விவாக, மணநீக்கக் கட்டளைச் சட்டத்தின் 4ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:— *113 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(1) இவ்வுட்பிரிவு வலுவுக்கு வந்ததன் பின்னர் நடைபெறும் கண்டிய விவாகம் எதுவும், விவாகத்தின் நேரத்தில் —

(அ) அதற்கான இரு திறத்தவர்களுள் ஒரு திறத்தவர் விவாகத்திற்கான சட்டமுறையான வயதுக்குக் கீழ்ப்பட்டவராக, அல்லது

(ஆ) அதற்கான இரு திறந்தவர்களும் விவாகத்திற்கான சட்டமுறையான வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களாக இருப்பின் செல்லுபடியானதாதல் ஆகாது.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவு "விவாகத்திற்கான சட்டமுறையான வயது" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாக, பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"விவாகத்திற்கான சட்டமுறையான வயது" என்பது விவாகத்திற்கான ஆண் திறந்தவர் தொடர்பிலும் பெண் திறத்தவர் தொடர்பிலும் பதினெட்டு வயது என்று பொருள்படும்;".

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 (வெளிநாடு) ரூபா 1,849 ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டு அலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.